## தி.மு.க. ஆட்சியின் போது வருவாய் பற்றாக்குறை குறைக்கப்பட்டுள்ளது!

# தி.மு.க. மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைப்பதா?

## மின்துறை வெள்ளை அறிக்கை, த.வெ.க. அரசின் வசதிக்காகவே வெளியிடப்பட்டுள்ளது!

### முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பேட்டியில் - மின்துறை அமைச்சருக்கு பதிலடி!

**சென்னை, ஜூன் 27–**

**மின்துறை வெள்ளை அறிக்கை வெளியிட்டு தி.மு.க. மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன் வைத்த மின்துறை அமைச்சருக்கு தி.மு.க. முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி பதிலடி கொடுத்துள்ளார்.**



இது குறித்து முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

இன்று தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட்டுள்ளனர். கடந்த ஐந்தாண்டுகள் திராவிட மாடல் ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால் நலிவடைந்து கிடந்த மின்சார வாரியம் காப்பாற்றப்பட்டது.

கடந்த ஐந்தாண்டுகளில் எங்களின் கழக தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது மின்துறைக்கு தேவையான நிதிகளை ஒதுக்கிசீரானமின்விநியோகத்திற்கு வித்திட்டார்.

கடந்த ஐந்தாண்டு திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டின் மின் தேவையானது ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்தே வந்துள்ளன. அப்படி மின் தேவை அதிகரித்த போதும் மக்கள் பாதிக்கப்படாத வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**வருவாய் பற்றாக்குறை குறைக்கப்பட்டுள்ளது!**

இப்போது வெளியிடப்பட்டுள்ள வெள்ளை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள வருவாய் பற்றாக்குறையானது 2011-16 இல் 56,361 கோடி , 2016-21 இல் 58,534 கோடி ரூபாய். முந்தைய அதிமுக ஆட்சிக் காலத்தில் மூன்று கட்டங்களாக மின்சார கட்டணம் ஏற்றப்பட்டது. 37% , 3.5% , 16% என அந்த கட்டண உயர்வு இருந்தது. அப்படி மின் கட்டணம் ஏற்றப்பட்ட போது கூட வருவாய் பற்றாக்குறை என்பது ரூ. 56,000 கோடி. அதற்கடுத்து ரூ58,000 கோடி என்ற அளவிற்கு உயர்ந்திருந்தது. ஆனால் கடந்த எங்களின் ஐந்தாண்டு ஆட்சியில் வருவாயானது ரூ 1,48,77, 856 உயர்ந்து ரூ.4,97,996 ஆக இருந்தது. வருவாய் பற்றாக்குறை ரூ 34,447 கோடியாக குறைக்கப்பட்டது. அதிமுக ஆட்சியில் 58,000 வருவாய் அதிகரித்த போது செலவும் அதிகரித்துள்ளது பற்றி கூறும் மின்சாரத்துறை அமைச்சர் அந்த செலவுகள் எதற்காக செய்யப்பட்டுள்ளன என்ற தகவலை மட்டும் மறைத்து விட்டார். அதையும் வெளிப்படையாக மக்கள் முன் கூறி இருக்க வேண்டும் ஆனால் அதை த.வெ.க. அரசு மறைத்துவிட்டது.

அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் 13.5% வட்டி க்கு பல்வேறு வங்கிகளில் கடன் வாங்கப்பட்டிருந்தது. அதை எல்லாம் சீர் படுத்தி 9.5% வட்டி என்ற அளவிற்கு குறைக்கப்பட்டது. இதன் மூலம் ஆண்டுக்கு 1200-1500 கோடி ரூபாய் சேமிக்கப்பட்டது. அதேபோல பிளை ஆஸ் (FLY ASH) விற்பனை ஆண்டுக்கு 90 கோடி ரூபாய் என்றிருந்ததை ஆண்டுக்கு 160 கோடி ரூபாய் என்ற அளவிற்கு வருவாய் உயர்த்தப்பட்டது.

**ஆண்டுக்கு ஆண்டு மின் தேவை அதிகரிப்பு!**

2019 - 20 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் மின் தேவை என்பது 94,947 மில்லியன் யுனிட் அதுவே 2020-21 இல் 93,344 , 2021-22 இல் 98,674 மில்லியன் யுனிட், 2022-23 இல் 1,03,546 மில்லியன் யுனிட், 2023-24 இல் 1,11,504 மில்லியன் யுனிட், 2024-25 இல் 1,16,813 மில்லியன் யுனிட் ஆக 94,947 மில்லியன் யுனிட் லிருந்து 1,16,813 மில்லியன் யுனிட் ஆக மின் தேவை அதிகரித்துள்ளது. ஏறத்தாழ 25,000 மில்லியன் யுனிட் அதிகரித்துள்ளது. அப்படி அதிகரிக்கும் போது அதற்கான கொள்முதலை அதிகரிக்க வேண்டும் , உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். இதற்கான செலவினம் என்பதும் அதிகரித்துள்ளது இதனை வெள்ளை அறிக்கையில் வெளியிட்டிருக்க வேண்டும்.

**தி.மு.க.வின் திட்டங்களே பட்டியலிடப்பட்டுள்ளன!**

அதேபோல இந்த வெள்ளை அறிக்கையில் திமுக வின் திட்டங்களையே பட்டியலிட்டுள்ளனர்.

2021 இல் திமுக ஆட்சி பொறுப்பை ஏற்ற போது மின்சார வாரியத்தின் கடன் 1,59,731கோடி இருந்தது. ஆண்டுக்கு 15,000 கோடி வட்டி மட்டுமே கட்டி வந்தோம். ஐந்தாண்டுகளில் முந்தைய ஆட்சியில் வாங்கிய கடனுக்கான வட்டி மட்டுமே 75,000 கோடி கட்டி உள்ளோம். இதை கூறாமல் மறைத்துள்ளனர்.

அதே போல அறப்போர் இயக்கம் தொடர்ந்துள்ள வழக்கில் ராஜஸ்தான் மின் மாற்றி கொள்முதலோடு தமிழ்நாட்டை ஒப்பிடுவதே தவறானது. நமது டெண்டர் முறை வேறு அவர்களுடையது வேறு. நாம் 25 ஆண்டுகள் நிலைத்திருக்க கூடிய தரமான மின் மாற்றிகளை வாங்குகிறோம். ஆனால் அவர்களுடைய மின்மாற்றி வாழ் நாள் 16 ஆண்டுகள் தான். அதே போல ஐந்தாண்டுகள் மெயிண்டனன்ஸ் அந்நிறுவனங்களின் பொறுப்பு அதற்காக நாம் 5% நிதியை பிடித்தம் செய்து வைத்துள்ளோம்.

ஆனால் ராஜஸ்தான் அரசு மூன்று வருடங்கள் மெயிண்டனன்ஸ், 0.5% நிதி மட்டுமே பிடித்தம் செய்கிறார்கள். தரமான பொருளுக்கும் டூப்ளிகேட் பொருளுக்குமான விலை வேறு வேறு ஆக தான் இருக்கும். நாம் தரமான மின் மாற்றியை வாங்குகி உள்ளோம். அனைத்து டெண்டர்களும் ஆன்லைன் முறையில் வெளிப்படையாக நடந்துள்ளது. நாம் நிர்ணயித்துள்ள தர அளவுகளை குறைக்காமல் , நிபந்தனைகளை மாற்றாமல் புதிய அரசு எவ்வளவு ரூபாய்க்கு கொள்முதல் செய்வார்கள் என்பதை பார்ப்போம்.

**துணை மின் நிலையங்கள்!**

அதேபோல கடந்த ஆட்சியில் எந்த கட்டமைப்பும் செய்யவில்லை என சொல்கிறார் அமைச்சர் ஆனால் அவர் வெளியிட்டுள்ள வெள்ளை அறிக்கையிலேயே எங்களது ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட கட்டமைப்பு நடவடிக்கைகளும், புதிய மின் உற்பத்தி நிலையங்களும் இடம் பெற்றுள்ளன. 99,573 மின்மாற்றிகள் புதியதாக நிறுவப்பட்டுள்ளதை வெள்ளை அறிக்கையிலேயே கூறியுள்ளார்கள். 423 துணை மின் நிலையங்கள் அறிவிக்கப்பட்டு பல துணை மின் நிலையங்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளன.

இப்படி வெள்ளை அறிக்கையிலேயே நாங்கள் செய்த திட்டங்கள் இடம் பெற்றிருந்தும் அதை திரித்து அமைச்சர் பேசி உள்ளார்.

வட சென்னை அனல் மின் திட்டம் நிலை 3 , உடன் குடி மின் திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் திமுக ஆட்சியில் தொடங்கப்பட்டன.

எண்ணூர் அனல் மின் நிலைய பணிகள் 75% நிறைவு பெற்றது.;

குண்டாறு மின் திட்ட பணிகள் 85% முடிந்துவிட்டது; கொல்லிமலை மின் திட்டம் 90% முடிந்துவிட்டது.

**தி.மு.க. ஆட்சியிலேயே 300 ஊழியர்களுக்கான பதவி உயர்வு!**

சமீபத்தில் தவெக அரசு வெளியிட்ட 300 ஊழியர்களுக்கான பதவி உயர்வு என்பது திமுக ஆட்சியில் இறுதி செய்யப்பட்டது. அதே போல சமீபத்தில் வழங்கிய பணி ஆணைகள் கடந்த ஆண்டு திமுக ஆட்சியில் TNPSC தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இப்படி திமுக அரசு செய்த செயல்களுக்கு தங்களின் ஸ்டிக்கர் ஒட்டும் வேலையை செய்து வருகின்றனர். ஏன் இதனை வெளிப்படையாக இந்த அரசு தெரிவிக்கவில்லை.

**அவதூறு பரப்பினால் வழக்கு தொடருவோம்!**

மேலும் கடந்த ஆட்சியில் மின் வாரியத்துறை தொடர்பாக எங்கள் தலைவரது குடும்பத்தையோ, எதிர்க்கட்சி தலைவர் அவர்களின் நண்பர்களையோ இணைத்து அவதூறு பரப்பினால் அவர்கள் மீது

இப்போது முதல்வரின் தனி செயலர் ஆக நியமிக்கப்பட்டுள்ள அவரது சினிமா PRO வான ஜெகதீஷ் தான் தமிழ்நாட்டின் மொத்த நிர்வாகத்தையும் பார்க்கிறார் என சொன்னால் அதை ஏற்றுக்கொள்கிறார்களா.?

**மின் வெட்டு: ஆய்வுக் கூட்டமே நடத்தவில்லை!**

மின் வெட்டு பிரச்சினையால் மக்கள் அவதியுற்று வருகின்றனர். அதை தீர்க்க ஆய்வுக் கூட்டமே நடத்தவில்லை. அதை நான் எடுத்து சொல்லி கேள்வி கேட்டும் இன்று வரை பதில் இல்லை. தங்களின் நிர்வாகத் திறமை யின்மையை மூடி மறைக்க தி.மு.க. மீது ஆதாரமற்ற அவதூறுகளை கூறிக்கொண்டு இருக்காமல் மக்களின் பிரச்சனைகளை தீர்க்க இந்த அரசு நவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலையில் கழக விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர் த.சந்திரசேகரன் அவர்களின் தாயார் த.பிச்சையம்மாள் அம்மையார் அவர்களின் திருவுருவப்படத்தை முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில், முன்னாள் அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன், மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன்ஆகியோர் முன்னிலையில் கழக முதன்மை செயலாளர் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்து மலரஞ்சலி செலுத்தினார். நிகழ்வில் க.வைரமணி, அன்னியூர் சிவா, மு.அன்பழகன், அன்பழகன், அரு. வீரமணி, மு.பி.மணி, கீரை.தமிழ்ராஜா, சு.சண்முகம், என்.சாத்தையா, கே.எஸ்.சந்திரன், தென்னலூர் எம்.பழனியப்பன், மு.க.ராமகிருஷ்ணன், அ.இளங்குமரன், மு.பி.ம.சத்தியசீலன், கே.பி.அய்யப்பன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, எம்.கோவிந்தராஜ், ஓ.எஸ். வெங்கடாச்சலம், வை. விஜயக்குமார், எம்.எஸ்.ஏ.ரியாஸ் முகம்மது உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

---

## பிரதமர் பதவியை விட, பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றமே முக்கியமென்று

# மண்டல் கமிஷன் பரிந்துரையை நடைமுறைப்படுத்தியவர் வி.பி.சிங்!

### முன்னாள் பிரதமர் வி.பி.சிங் பிறந்தநாளையொட்டி – தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஜூன் 27–**

**பிரதமர் பதவியை விட பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றமே முக்கியமென்று மண்டல் கமிஷன் பரிந்துரையை நடைமுறைப்படுத்தியவர் வி.பி.சிங் என்று தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**



இது குறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

இந்தியாவின் சமூகநீதிக் காவலர் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அவர்களின் பிறந்த நாள் இன்று.

பிரதமர் பதவியை விட, பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றமே முக்கியமென்று மண்டல் கமிஷன் பரிந்துரையை நடைமுறைப்படுத்தியவர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் உற்ற நண்பராக தோளோடு தோள் நின்ற பண்பாளர்.

பதவியைவிட கொள்கையே பெரிது என்று வாழ்ந்து மறைந்த வி.பி.சிங் அவர்களின் புகழைப் போற்றுவோம்!

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

## உள்ளாட்சி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் மக்கள் ஆதரவோடு மீண்டும் வெல்வோம்!

# தி.மு.க. ஆட்சிக் கால சாதனைகளை எந்த அரசும் மறைக்க முடியாது!

### முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!

*திருச்சி, ஜூன். 27-*



திருச்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் திருச்சி எடமலைப்பட்டி புத்தூர் பகுதியில் மாவட்ட கழக துணை செயலாளர், மாமன்ற உறுப்பினர் முத்துச்செல்வம் ஏற்பாட்டில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளரும், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான, முன்னாள் அமைச்சர் கே என் நேரு, மற்றும் திராவிடர் கழக துணை பொதுச்செயலாளர் வழக்கறிஞர் மதிவதனி ஆகியோர் கலந்து கொண்டு கலைஞர் அவர்களின் புகழையும் சாதனைகளையும் போற்றி சிறப்புரையாற்றினர்.

இந்த பொதுக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு பேசுகையில்..

கடந்த ஐந்தாண்டு கால மு.க.ஸ்டாலின் ஆட்சியில் மட்டும் திருச்சி மாவட்டத்தின் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்காக 34,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, எண்ணற்ற பணிகள் செய்து தரப்பட்டுள்ளன. திருச்சியின் 9 தொகுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தங்குதடையின்றி கிடைக்கச் செய்தது திமுக ஆட்சிக் காலத்தில் தான், மாநகராட்சிப் பகுதிகளில் பட்டா வழங்குவதில் இருந்த சிக்கல்களைத் தீர்த்து, சுமார் 40 முதல் 50 ஆண்டுகளாக வசித்து வந்த 15,000க்கும் மேற்பட்ட மக்களுக்கு அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், கடந்த தேர்தலில் மக்கள் அளித்த ஆதரவையும், சில தொகுதிகளில் ஏற்பட்ட மிகக் குறைந்த வாக்குகள் வித்தியாசத்திலான பின்னடைவுகளையும் குறிப்பிட்ட அமைச்சர், நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ளதால் அது குறித்துப் பேச இயலாது என்றார். இருப்பினும், மக்கள் நலனுக்காகத் தொடர்ந்து உழைக்கப் போவதாகக் கூறினார். மேலும் வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் தாய்மார்களும் பொதுமக்களும் தங்களது பேராதரவை வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து பொதுக்கூட்டத்தில் திராவிட கழகத் துணை பொதுச்செயலாளர் வழக்கறிஞர் மதிவதனி கலந்து கொண்டு கலைஞர் அவர்களின் புகழையும் சாதனைகளையும் எடுத்துரைத்து பேசினார். நாம் மீண்டும் எழுவோம் என்பதற்கான முதல் நிகழ்ச்சிதான் திருச்சியில் தற்போது நடந்து கொண்டிருக்கிறது. தேர்தல் வெற்றி, தோல்விகளால் பின்னடைவைச் சந்திக்கக் கூடிய இயக்கம் திராவிட இயக்கம் அல்ல. அரசியல் தேர்தல் முடிவுகளைக் கொண்டு நம்முடைய வெற்றியை கணக்கிட முடியாது. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் முன்னாள் முதலமைச்சர் ஸ்டாலினுக்கும் எதிராகப் பெண்கள் இருப்பதாக ஒரு பிம்பத்தை உருவாக்கப் பார்க்கிறார்கள். ஆனால், பகுத்தறிவுள்ள பெண்கள் எப்போதும் திராவிட இயக்கத்தின் பக்கமே நிற்கிறார்கள் என்பதைக் காட்டவே இப்பெரும் கூட்டம் கூடியுள்ளது. பெரியார் போன்ற தலைவர்கள் உழைத்ததால் தான், இன்று பெண்களுக்குப் படிப்பும், வேலை வாய்ப்பும், மேடைகளில் பேசும் உரிமையும் கிடைத்துள்ளன.

பெண்களின் உழைப்பை அங்கீகரித்து கலைஞர் மகளிர் உரிமைத் தொகையாக ரூபாய் 1000 வழங்கியவர் முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட விடியல் பயணம், காலை உணவுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், புதுமைப் பெண் திட்டம் மற்றும் நான் முதல்வன் போன்ற திட்டங்கள் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியுள்ளன. தற்போதைய புதிய அரசு, இத்திட்டங்களின் பெயர்களை மாற்றினாலும், இவற்றால் ஏற்பட்ட நன்மைகளையும் வளர்ச்சியையும் வரலாற்றிலிருந்து யாராலும் நீக்க முடியாது. கொரோனா பேரிடர் காலத்தில், தனது உயிரையும் பொருட்படுத்தாமல் பிபிஇ கிட் அணிந்து கொண்டு மருத்துவமனைகளுக்குச் சென்று ஆய்வு நடத்தியவர் முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின். அரசியல் களத்தில் பல்வேறு பொய்களைப் பரப்பி வாக்கு கேட்டு வந்தவர்களுக்கு, மக்கள் தற்போது தகுந்த பதிலடி கொடுத்து வருகிறார்கள். திராவிட இயக்கங்களின் கொள்கைகளும் சாதனைகளும் மக்கள் மனதில் எப்போதும் நிலைத்திருக்கும் என்று அவர் பேசினார்.

இந்த பொதுக் கூட்டத்தில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன், மாவட்ட பொருளாளர் துரைராஜ், கோட்டத் தலைவர் துர்கா தேவி, மாமன்ற உறுப்பினர் கிராப்பட்டி செல்வம், பகுதிச் செயலாளர் மோகன் தாஸ் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---

## தங்க மோதிரமா? தரமான மகப்பேறு சிகிச்சையா?

# தமிழ்நாடு அரசு தனது முன்னுரிமைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும்!

### மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கை!

*சென்னை, ஜூன் 27-*



மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கும் திட்டத்தை தமிழக அரசு அறிவித்துள்ளதை மறுபரிசீலனை செய்து இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியை ஊரக பகுதிகளில் உள்ள அரசு மருத்துவமனைகளின் பிரசவ அறைகளை மேம்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

தமிழ்நாட்டின் பல அரசு மருத்துவமனைகளில் மகப்பேறு அறைகளில் நெரிசல், மருத்துவப் பணியாளர் பற்றாக்குறை, போதிய படுக்கை வசதியின்மை மற்றும் உபகரணக் குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றன. பல ஏழை மற்றும் நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் இந்த குறைபாடுகளின் மத்தியில் பிரசவ சேவைகளைப் பெற வேண்டிய நிலை உள்ளது.

இந் நிலையில், புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்குவதற்காக கோடிக்கணக்கான ரூபாய்களை செலவிடுவது அரசின் முன்னுரிமை சரியான திசையில் உள்ளதா என்ற கேள்வியை எழுப்புகிறது.

குழந்தையின் கையில் தங்க மோதிரம் அணிவிப்பதை விட, தாயின் உயிரைக் காக்கும் நவீன மகப்பேறு அறை (வார்டு), குழந்தையின் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்தும் சிறப்பு சிகிச்சைப் பிரிவு, போதுமான மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் ஆகியவையே மக்களுக்கு உண்மையில் தேவை.

மக்களின் வரிப்பணத்தில் செயல்படும் அரசின் கடமை, காட்சிப்படுத்தும் திட்டங்களை அறிவிப்பது அல்ல; மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நீடித்த முதலீடுகளை மேற்கொள்வதாகும்.

தங்க மோதிரம் சில நாட்களுக்கு செய்தியாக இருக்கலாம்; ஆனால் மேம்படுத்தப்பட்ட அரசு மருத்துவமனைகள் பல தலைமுறைகளுக்கு நன்மை பயக்கும்.

எனவே, தமிழக அரசு பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கும் திட்டத்தை கைவிட்டு, அதற்காக ஒதுக்கப்படும் நிதியை குறிப்பாக ஊரக அரசு மருத்துவமனைகளின் மகப்பேறு அறைகள், குழந்தைகள் நலப் பிரிவுகள் மற்றும் மருத்துவ கட்டமைப்பு மேம்பாட்டிற்குத் திருப்பிவிட வேண்டும். அதுவே சமூக நலனுக்கும், தாய்-சேய் பாதுகாப்பிற்கும், பொது சுகாதார முன்னேற்றத்திற்கும் ஏற்ற பொறுப்பான முடிவாக இருக்கும்.

இவ்வாறு மனிதநேய மக்கள் கட்சி தலைவர் எம் எச். ஜவாஹிருல்லா தெரிவித்துள்ளார்.